இணைப்பு

(512 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 32–

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2012–2013

I. தொழிலாளர் துறை

தமிழ்நாட்டில் அமைந்துள்ள 38,379 தொழிற்சாலைகளும், 3,15,572 கடைகள் மற்றும் நிறுவனங்களும், 2.79 கோடிக்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றன. இதில் 8% தொழிலாளர்கள் அமைப்புசார்ந்த பிரிவினையும், 92% தொழிலாளர்கள் அமைப்புசாரா பிரிவினையும் சார்ந்தவர்களாவர். வலுவான உற்பத்தி அடிப்படையும், சீராக முன்னேறும் சேவைப் பிரிவையும் கொண்ட ஒரு முன்னேறிவரும் தொழிற்மயமாக்கப்பட்ட மற்றும் முதலீட்டுக்குச் சாதகமான மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. மாநிலமானது, தொழில் நல்லுறவுகள், நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தொழிற்சங்கங்கள், கூட்டு பேர கோட்பாடு மற்றும் திறமையான தொழிலாளர், நிருவாகம் ஆகிய நலன்களைக் கொண்ட நன்கு மேம்பட்ட தொழிற்சந்தையினைக் கொண்டுள்ளது.

நிலையான பொருளாதார வளர்ச்சி, பல்வேறு வகையான வேலைவாய்ப்புகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைக்கும் நிலை ஆகியவை மாநிலத்தின் இன்றைய மாறுபடும் இயல்புடைய தொழில் உறவுகளை வெளிப்படுத்துவனவாகும். இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களில் ஏற்பட்டுள்ள வெவ்வேறான வளர்ச்சியானது தொழில் நல்லுறவுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

[2012 மே 11

இரண்டாம் நிலைத் தொழில்களில் தொழில்நுட்ப செறிவு மிக்க பிரிவுகளான மோட்டார் வாகனத் தொழில் (தானியங்கி இயந்திரத் தொழில்) பெருமளவில் நேரடி அந்நிய முதலீட்டினைக் கண்டுள்ளது. மாறுபடும் கலாச்சாரம் மற்றும் உள்ளக வேலை சூழலில் உலக நிருவாக முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றிற்கிடையே இசைவினை ஏற்படுத்துவதில் சவால்களை உண்டாக்கியுள்ளது. சமீப காலத்தில் மூன்றாம் நிலைத் தொழில்களில் ஏற்பட்டுள்ள அபரிமிதமான வளர்ச்சியானது மிகவும் தகுதி படைத்த மனித வளத்திற்கான தேவையை அதிகப்படுத்தியுள்ளது. துரிதமாக மாறும் தொழில்நுட்ப முன்னேற்றமும், அதிக அளவிலான தொழிலாளர்களின் வேலை மாற்றங்களும் சேர்ந்து தொழிலாளர்—வேலையளிப்பவர் உறவு நிலையில் முன்பில்லாதவாறு பெரிய அளவிலான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

உயர்ந்து வரும் சராசரி ஆயுட்காலம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் காரணமாக தொழிலாளர்களின் புள்ளிவிவரங்களில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. அதிக வயதும் நீண்ட ஆயுட்காலமும் கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இத்தகையோருக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குவதும் மருத்துவ வசதிகளை அளிப்பதும் அவசியமாகிறது. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களைத் துரிதமாக அமல்படுத்துவதன் மூலமும் உரிய காலத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பயன்களைத் தொழிலாளர்களுக்குக் கொண்டு சேர்ப்பதன் மூலமும் இங்ஙனம் மாறி வரும் சூழலைக் கருத்தில் கொண்டு தொழிலாளர் துறை செயல்படுகிறது.

தொழிலாளர் துறை, தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களது நலன்களைப் பாதுகாக்கவும் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தி வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல், நுகர்வோர் நலனைப் பாதுகாக்க சட்டமுறை எடையளவுகள், சட்ட அமலாக்கம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நல வாரியங்கள்மூலம் சமூகப் பாதுகாப்பு அளித்தல் போன்றவை இத்துறையின் பணிகளில் ஒருசில.